RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2118

# இலக்கிய வாசிப்பில் கருப்பொருள் சார்ந்த பொருளடக்க ஆய்வுமுறை

## ஜெ. விமல் [அ, *]

[அ] இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை, பெரியார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலை நகர், சேலம்- 636011, தமிழ்நாடு, இந்தியா.

# Thematic Content Analysis in Literary Studies

## J. Vimal [a, *]

[a] Department of Journalism and Mass Communication, Periyar University, Palkalai Nagar, Salem-636011, Tamil Nadu, India.

Corresponding Author:
vmldass@gmail.com

Received : 05-10-2020
Accepted : 24-10-2020

Check for updates

### ABSTRACT

Although semantics has become world-famous in literary research throughout the twentieth century, it is not just word counts or objective objectives that are used to examine the content of a work. The reason is that researchers have suggested that characteristic content analysis may help in deeper understanding and excavating the underlying meaning of the texts. This article explores the need for characteristic content analysis and the steps to be taken to unravel the themes embodied in the work. In the study of literature, characteristic content studies can help to identify themes, to describe the data in the work, to compare with other data, and to intervene into the text.

**Keywords:** Texts, Folklore, Literary Research, Content Analysis

## ஆசிரியர் குறிப்பு



முனைவர் ஜெ. விமல் அவர்கள் சென்னை லயொலா கல்லூரியில் காட்சித் தகவலியலில் முதுகலைப் பட்டம் பெற்று அதில் தங்கப்பதக்கம் பெற்றவர். இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியலிலும் முதுகலைப் பட்டம் பெற்றவர். சங்க இலக்கியத்தில் தொடர்பாடல் என்னும் தலைப்பில் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். அதே பல்கலையில் உதவிப்பேராசிரியராகவும், மக்கள் தொடர்பு அலுவலராகவும் பணியாற்றியவர்.

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பொருளடக்க ஆய்வு (content analysis) என்னும் ஆய்வு அணுகுமுறை உலகமெங்கும் பரவலான வரவேற்பைப் பெற்ற ஆய்வு முறையாகப்

பிரசித்திப்பெற்றது. இவ்வாய்வு அணுகுமுறை, பெரும்பாலும் எண்ணியல் வகை (quantitative kind) ஆய்வுகளுக்கே அதிகம் பயன்படுத்தப்பெற்றது. குறிப்பாக பொருளடக்க ஆய்வின் தந்தை என்று அழைக்கப்பட்ட பெர்னார்ட் பெரல்சன் (Berelson, 1952) எண்ணியல் வகை பொருளடக்க ஆய்வினை (quantitative content analysis) வலியுறுத்தியவர்களில் முகாமையானவராவார். ஆனால் இக்கருத்தினை மறுதளித்து பண்பியல் வகை பொருளடக்க ஆய்வினை ஆதரிக்கும் ஆய்வாளர்கள் பின்வரும் கூற்றினைத் தமது வாதமாக முன்வைக்கின்றனர். அதாவது ஒரு பனுவலின் உள்ளடக்கத்தை ஆராய்ந்திட வெறும் வார்த்தை கணக்கீடு (word counts) அல்லது எண்ணியல் வகை சொல்லும் புறநிலை நோக்கு மட்டுமே (objective) பயன்தராது; காரணம் ஒரு பனுவலைப் படிப்பதில் ஆழமான புரிதல் (deeper understanding) மற்றும் அப்பனுவலில் ஒளிந்துள்ள உட்பொருளை அகழ்ந்தாய்வதற்கும் (excavating the underlying meaning of the texts) பண்பியல் வகை பொருளடக்க ஆய்வே உதவி புரியும் என்னும் கருத்தினை முன்வைக்கின்றனர். எவ்வாறு பண்பியல் வகை பொருளடக்க ஆய்வு மாதிரிகளைக் கொண்டு வெறுமனே எண்ணியல் நோக்கில் அளவிடாமல் இலக்கிய வாசிப்பில் பனுவலில் மறைந்திருக்கும் கருத்துகளை உய்த்துணர உதவுகிறது என்பதைப் பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பண்பியல் வகை உள்ளடக்க ஆய்வு

1983-இல் மேரிங் என்பவரால் பண்பியல் வகை உள்ளடக்க ஆய்வு முன்மொழியப்பட்டு சுமார் 32 வருடங்களுக்கு முன்பு வேலையின்மையின் உளவியல் மற்றும் சமூக விளைவுகளைப் பற்றிய ஆய்வில் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. பொருளடக்க ஆய்வு என்பது பனுவலிலிருந்தும், அதன் ஏனைய நிலை மற்றும் உயிர்ப் பண்புகளிலிருந்தும் கிடைக்கப்பெறும் குறிப்பிட்ட அனுமானங்களை விளங்கிக்கொள்ள உதவும் முறை என்கிறார் கிரிப்பென்டொர்ப் (Krippendorf, 1980). இதன் நோக்கம் வெறுமனே பனுவல் வெளிப்படையாகக் காட்டும் பொருளடக்கத்தை மட்டும் பகுப்பாய்வு செய்வதல்ல எனப்படுகிறது.

## பனுவல் ஆய்வுகளில் பண்பியல் வகை பொருளடக்க ஆய்வின் அவசியத்தன்மை

தொடர்பாடல் செயல்முறையை (process of communication) லாஸ்வெல் (Lasswell, Harold, 1948) பின்வரும் கூற்றுகளால் விளக்குகிறார். அதாவது தொடர்பாடலைப் பற்றிய படிப்பில் யார் சொல்லுகிறார்? என்னச் சொல்கிறார்? யாருக்குச் சொல்கிறார்? எதன் ஊடாகச் சொல்கிறார்? அது எவ்வகையான விளைவுகளை ஏற்படுத்துகிறது? என்பதாகும். இதே கருத்தியலைக் கோடிட்டு காட்டும் வெபர் (Weber, Robert, 1990) தொடர்பாடலில் பயன்படுத்தப்படும் லாஸ்வெல்லின் இந்த செயல்முறை விளக்கம் பண்பியல் ஆய்வுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், அவசியமானதாகவும், மேலும் பண்பியல் வகை பொருளடக்க ஆய்வில் ஆய்வுக்குட்படும் பனுவலிருந்து செல்லுபடியாகக் கூடிய/தரமுள்ள அனுமானங்களை / முடிவுகளை (valid inferences) பெற முடியும் என்கிறார். இதே

கருத்தினையே வலியுறுத்தும் ஹோல்ஸ்டி (Holsti, Ole, 1969) பண்பியல் வகை பொருளடக்க ஆய்வினை, செய்திகளின் பண்புகளை மிகச் சரியான முறையிலும் புறநிலை நோக்கிலும் ஆராய்ந்து அனுமானங்களைப் பெற்றிட (inferences) மிகச்சிறந்ததொரு உத்தி எனக் கூறுகிறார்.

இதேப் போன்று பண்பியல் வகை ஆய்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் கோலே (Cole, 1988) மக்கள்திரள் தொடர் பாடலின் வளர்ச்சிக்குப் பிறகு இலக்கியங்களை ஆழ்ந்து படிக்கப் பொருளடக்க ஆய்வுச் சிறந்த முறையாக திகழ்கிறது என்கிறார். அதற்கு அவர் சுட்டும் காரணம் "எழுதப்பட்டுள்ள, சொல்லப்பட்டுள்ள, அல்லது காட்சிப்படுத்தப்பட்டுள்ள செய்திகளைத் தீவிர ஆய்வுக்கு (to intensely analyse written, verbal or visual communication messages) உட்படுத்த பண்பியல் வகை பொருளடக்க ஆய்வு சிறந்ததென அவர் மேலும் எடுத்துரைக்கின்றார்.

பனுவல் என்பது புத்தகமாகவோ(book), பாடலாகவோ (poems) இருக்கலாம். வாய்மொழி பனுவல் (oral text) என்பது பேச்சு அல்லது பேருரையாகவோ (speeches and discourses) இருக்கலாம். ஒலி, ஒளி பனுவல் (audio-visual text) என்பது தொலைக்காட்சி நிகழ்ச்சியாகவோ, சினிமாகவோ அல்லது இதர ஒளிப்படங்களாகவோ இருக்கலாம் என்று பனுவல் என்ற சொல்லுக்கான விரிந்த பொருளைத் தருகிறார் கோலே (Cole, 1988).

## கருப்பொருள் சார்ந்த பொருளடக்க ஆய்வுமுறை

பண்பியல் ஆய்வில் உலகெங்கும் இன்று பிரசித்திப் பெற்று வரும் ஆய்வு முறைகளுள் ஒன்று கருப்பொருள் ஆய்வுமுறை (thematic analysis) ஆகும். இம்முறை 1970 களில் தனித்துவம் கொண்ட ஆய்வு அணுகுமுறையாக (approach) பயன்படுத்தப்பட்டு பின்னர் உளவியல் படிப்புகளில் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

பாரூன் & கிளார்க் (Braun, and Clarke, 2006) கருப்பொருள் ஆய்வினைப் பயன்படுத்தி அதற்கு பின்வரும் விளக்கம் கொண்ட வரையறைத் தருகின்றனர்: தரவுகளில் உள்ள பல்வேறு முறைகளை/வடிவங்களை (patterns) கண்டறிதல், பகுத்தல் மற்றும் அறிக்கையிடுதல். அதாவது, பனுவலில் குடியிருக்கும் கருத்துகள் எந்தெந்த முறைகளில் வடிவங்களில் பொருளில் பொதிந்திருக்கின்றன என்பதனைக் கண்டறிதல், பகுத்தல் மற்றும் அறிக்கையிடுதல். பனுவலில் இருந்து கருத்தினைப் பகுத்தறிய ஆய்வாளர் ஒரு குறிப்பிட்ட முறையைத்தான் பின்பற்றவேண்டும் என்ற நிலை இல்லாமல், ஆய்வாளரின் விருப்பத்திற்கேற்பவும், பனுவலின் பன்முகத் தன்மையை முன்னிட்டும் பல்வேறு வகையான ஆய்வுமுறைகளையும்(be applied a cross range of theoretical approaches) கையாள அனுமதிப்பதே கருப்பொருள் ஆய்வின் முக்கிய அம்சமாகும் என பாரூன் & கிளார்க் (Braun, and Clarke, 2006) குறிப்பிடுகின்றனர். இதே கருத்தினை டெய்லர் மற்றும் அசர் (Hewitt-Taylor, 2001) போன்றோரும் கூறுகின்றனர்.

கருப்பொருள் சார்ந்த பொருளடக்க ஆய்வுமுறையை டெஸ் (1990) என்பார் பொருள் விளக்கமளிக்கும் செயல்முறை (interpretive process) என்கிறார். அதாவது தரவுகளை முறையாகத் திரட்டி அதை ஆய்வுக்குட்படுத்தி அது தருகின்ற விளக்கத்திற்கு ஒளி ஊட்டுதல்

(illuminating description) என்பதாகும். பாருன் & கிளார்க் (Braun, and Clarke, 2006) கருப்பொருள் சார்ந்த பொருளடக்க ஆய்வுமுறைகளை ஆறு படிநிலைகளைக்கொண்டு விவரிக்கின்றார். அவை,

1. தரவுகளை நன்கறிந்துணர்தல் (familiarization with data)
2. தரவுகளை வகைப்படுத்துதல் (Coding -capturing both semantic and conceptual reading of the data)
3. கருப்பொருளைத் தேடுதல் (searching for theme which is a coherent and meaningful pattern in the data relavant to the research question)
4. வகைப்படுத்தப்பட்ட தரவுகளோடு கருப்பொருள்களை ஒப்பிட்டு மறுஆய்வு செய்தல் (reviewing themes by checking the themes 'work' in relation to both coded extracts and the full data-set)
5. கண்டறியப்பட்ட கருப்பொருள்களின் சாரம்சத்தை விவரித்தல் (defining and naming themes by conducting and writing a detailed analysis of each theme)
6. முடிவுகளை எழுதுதல் (preseting a coherent and persuasive story about the data)

## முடிவுரை

சமூக அறிவியல் ஆய்வுகளில் கருப்பொருள் அடையாளம் கண்டுணர்தல் இன்றியமையாத செயல்பாடு. இவ்வாறு கருப்பொருள் கண்டறிதல், பனுவலில் உள்ளத் தரவுகளை (data) விவரிக்கவும் (to describe), இதரத் தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் (to compare), விளக்கவும் (to explain) உதவுகின்றன. ஆக கருப்பொருள் சார்ந்த பொருளடக்க ஆய்வுமுறை, வெறுமனே மாறிகளை கொண்டு மட்டும் அளவிடாமல் (mesarement of variables) அதைத்தாண்டி பனுவலுக்குள் பயணப்படவும் அதைக் குறுக்கீட்டு முறையில் படிக்கும் (intervening into text) புதிய பரிணாமத்தையும் கொடுப்பதால் இலக்கிய வாசிப்பிற்கு இவ்வகை ஆய்வுமுறை பெருந்துணை புரியும் என்பது நிதர்சனமான உண்மை.

## References

Berelson, B., (1952), Content analysis in communication research. Glencoe, IL: Free Press.

Braun, V. and Clarke, V., (2006), Using thematic analysis in psychology. Qualitative Research in Psychology, 3 (2). pp. 77-101. (1990)

Cole F.L., (1988), Content analysis: process and application. Clinical Nurse Specialist 2(1), 53–57.

Hewitt-Taylor J., (2001), Use of constant comparative analysis in qualitative research, Nursing Standard. 15, 42, 39-42. Date of acceptance: March 19 2001.

Holsti, Ole R., (1969). Content Analysis for the Social Sciences and Humanities. United States. Addison-Wesley Pub. Co.

Krippendorf, K., (1980) Content analysis: An introduction to its methodology. Beverly Hills, CA: Sage.

Lasswell, Harold (1948), Bryson, L., ed. The Structure and Function of Communication in Society. The Communication of Ideas. New York: Institute for Religious and Social Studies.

Weber, Robert (1990), Basic Content Analysis (2nd Edition). London. Sage Publications.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License